அண்ணை அமிர்தலிங்கத்தின் பதில்கள்



டிசம்பர் 1972 30 சதம்


# வெள்ளி

* இலக்கியச் செல்வரின் பசுமை நினைவுகள்
○ 'மௌனத்கல்யன்' எழுதும் புதுமைக் கதை

கடந்த ஒக்டோபர் 2-ம் திகதி தமிழ்க் கூட்டு முன்னணி வெற்றிகரமாக ஒரு ஹர்த்தாலை நடத்தியதல்லவா? ''அந்த ஹர்த்தால் நடத்துவதென்ற முடிவை தமிழ்க் கூட்டு முன்னணி தீர்மானிக்கவில்லை. தமிழரசுக் கட்சித் தலைவர்களே, அதுவும் சென்னையில் தி. மு. க. தலைவர்களுடன் கூடித் தீர்மானித்தார்கள்'' என்று தோழர் சண்முகதாசன் ஒரு குற்றச்சாட்டை வெளியிட்டார். இந்தக் குற்றச்சாட்டைப் பத்திரிகைகள் பெரிதுபடுத்தின. 'டெய்லி நியூஸ்' பத்திரிகை ஒரு முழுத் தலையங்கமே எழுதிற்று. இதை மறுத்து, தமிழரசு கதிரைவேற்பிள்ளை பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். தமது குற்றச்சாட்டை மறுக்க முடியுமா என்று சண்முகதாசன் சவால் விட்டிருந்தார். இப்போது கதிரவேற்பிள்ளை தமக்கே உரிய திறமையான கருத்து வெளிப்பாட்டுடன் மறுப்புக் கொடுத்து விட்டார். தோழர் சண்முகதாசன் என்ன சொல்லப்போகிறாரோ?




# 'அண்ணா' அமிர்தலிங்கம் பேசுகிறார்!



லிங்கன், பேராதனை.

★ தமிழர் கூட்டு முன்னணியின் உரிமைப்போராட்டம் நடைமுறையில் அகிம்சை வழியை விட்டு விலகி, பலாத்கார முறையில் வளரத் தொடங்கினால் (மகாத்மாகாந்தி செய்தது போல) உடனே போராட்டத்தை நிறுத்திவிடுவீர்களா?

இன்றைய சூழ்நிலையில் அகிம்சை வழிப் போராட்டத்தை விட வேறு மார்க்கத்தில் செல்வது இன அழிவுக்கு வழிவகுக்கும். பலாத்கார முறையில் போராட்டம் வளர்வது இனத்திற்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமாதலின் அதை நிறுத்துவோம். ஆனால் சூழ்நிலை மாறினால் இளைஞரின் உணர்ச்சியை அதிக காலம் கட்டுப்படுத்தி வைக்க முடியாதென்பதையும் நாம் அறிவோம். 1942 ம் ஆண்டு அண்ணல் காந்தியும் இதை உணர்ந்தார்.

செல்வி, பிரேமா நடராசா,
கந்தர்மடம்.

★ தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் எமது நாட்டுத் தமிழ் மக்களையும் பாதிக்கும் அல்லவா? இங்கு அநேகமானோர் மக்கள் திலகம் திரு. இராமச்சந்திரனுக்கே ஆதரவாக இருக்கிறார்களென்பது என் எண்ணம். இது பற்றி உங்கள் கருத்து யாது?

நிச்சயமாக உலகெங்கும் வாழும் தமிழ்மக்களை இது பாதிக்கும். நாம் யார்பக்கம் என்பது முக்கியமல்ல, இயக்கம் சிதைந்து சீரழியாது காக்கப்படுவதே முக்கியம்.

ஆ. வரதராசா, அச்சுவேலி.

★ தமிழர் கூட்டணியினர் வகுத்துக்கொண்ட பொதுக் கொள்கைத் திட்டத்தை அம்மையாரின் அரசு ஏற்றுக்கொண்டால், தமிழர் கூட்டணியிலுள்ள கட்சிகள் மீண்டும் பிரிந்து சென்று தனித்தனியாக இயங்குமா அல்லது கூட்டணி தொடர்ந்து செயல்படுமா?

கூட்டணியின் கொள்கைத் திட்டம் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதை நடைமுறைப்படுத்த நம் ஒற்றுமை நிலைக்க வேண்டியது அவசியம்.

க. செல்வரத்தினம்,
யாழ்ப்பாணம்.

★ தமிழ்நாடு சென்று அங்குள்ள பல தலைவர்களையும் சந்தித்தீர்களே, உங்களுக்குப் பிடித்த சிறந்த தலைவர் யார்? ஏன்?

சிலம்புச் செல்வரின் இனப் பற்றும், திருச்சி கி. ஆ. பெ.



விஸ்வநாதனின் தமிழ்ப் பற்றும், பெரியாரின் அறிவும், கலைஞரின் அரசியல் விவேகமும், மக்கள் திலகம் ஈழத் தமிழர் பிரச்சினையில் காட்டிய ஆழ்ந்த அக்கறையும் என்னைப் பெரிதும் கவர்ந்தனவாயினும் நாவலர் நெடுஞ்செழியனிடம் நான் கண்ட நிறைகுடம் போன்ற பண்பு எனக்கு மிகவும் பிடித்தது.

ரா்ஜுன் சிவா, யாழ்நகர்.

★ இன்று தமிழ் நாட்டில் நடக்கும் சிறு போராட்டங்களை அண்ணன் (அண்ணாத்துரை) பார்த்தால் என்ன நினைத்திருப்பார்?

தான் கொடுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மந்திரத்தை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட்டார்களே தன் தம்பிமார் என்று கலங்கியிருப்பார்.

வே. குணரத்தினம்,
கொழும்பு-10.

★ அண்ணா! ஈழத்து அரசியல்வாதிகளில் பீலிக்ஸுக்கு இணையாக நாவால் சாட்டையடி கொடுக்கும் நாவலரே, மற்றவரைப் புண்படுத்துவதில் உங்களுக்கு ஆனந்தமா? உங்களிடம் அடிபட்டவர்கள் பதிலடி தருவதுண்டா? அப்படியெனில் உங்களைப்பெரிதும் கவர்ந்த பதிலடி யாரால், எவ்விதம் தரப்பட்டது எனச் சொல்வீர்களா?

புண்படுத்துவதில் ஆனந்தமில்லை, ''ஆறாதே நாவினால் சுட்டவடு'' என்ற வள்ளுவர் வாய்மொழியை அறிவேன். ஆனால் சொற்போர் நடைபெறும்போது எதிரியை வாயடைக்கச் செய்யவேண்டிய அவசியமுண்டு. பதிலடி வாங்கவேண்டித்தான் வரும். 'தமிழினத்திலிருந்து சிங்களவராகமாறிய வம்சத்தினர் எம்மையும் மாறும்படி கூறுகின்றனர்' வாலறுந்த நரிபோல, என்று நீதி அமைச்சராகவிருந்த ஸ்டான்லிடிசொய்சாவிற்கு அடி கொடுத்தேன். அவர்திருப்பி 'உங்கள் வால்களை வைத்துக்கொள்ளப் போகிறீர்களா' என்று பதிலடி தந்தார்!

எஸ். ஆர். சிவகுமார்,
பருத்தித்துறை.

★ நாட்டில் ஜனநாயகத்தையே குழிதோண்டிப்புதைப்பதற்கு அரசு கொண்டுவரும் ''பத்திரிகை மசோதாவை'' நீங்கள் எதிர்த்துப் போராட்டம் செய்வீர்களா?

பெரும்பாலான பத்திரிகைகளும் சேர்ந்து தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக்குழி தோண்டிப்புதைத்து விட்டன. ஆயினும் நாட்டில் சர்வாதிகாரம் வேரூன்றுவதைத்தடுப்பதற்கு பத்திரிகை மசோதாவை ஏனையோருடன் சேர்ந்து எதிர்த்துப் போராடுவோம்.


**சி. அன்பழகன், மட்டுவில்.**

★ **கடந்த பொதுத்தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் "எமது உதவியில்லாமல் எந்தக் கட்சியும் யு. என். பி. யோ— எஸ், எல். எஃப். பி. யோ ஆட்சிக்கு வரமுடியாது'' என்று பேசினீர்கள். அப்பேச்சை பிரசுரித்த பத்திரிகைகளை தமது கூட்டங்களில் எடுத்துக்காட்டி, 'இதோ, இப்படி சொல்லுகிறார்கள் தமிழரசுக் கட்சியினர். எனவே இந்த நிலை ஏற்படாமல் இருக்க, எமது கட்சிக்கு வாக்களியுங்கள்' என்று எஸ். எல் எஃப். பி-யினர் பேசினார்கள். கண்டபலன் - யாருடைய உதவியுமில்லாமல் எஸ். எல். எஃப். பி அரசாங்கம் ஏற்பட்டது. எனவே தீர்க்க தரிசனமற்ற உங்கள் பேச்சு, எதிரியின் வெற்றிக்கு உதவியது என்பதை மறுப்பீர்களா?**

ஆட்சிக்கு வரமுடியாத நிலை **1960** லும் **1965** லும் ஏற்பட்டதைச் சுட்டிக் காட்டினேன். அதே நேரத்தில் **1956** லும் **1960** ஜூலையிலும் தனிக் கட்சி ஆட்சி வந்தபோது எமது உரிமை பெறப் பாராளுமன்றத்திற்கு வெளியே போராடிய வரலாற்றையும் எடுத்து விளக்கினேன். பாராளுமன்றத்திற்கு உள் நடவடிக்கைகள் மூலமோ பாராளுமன்றத்தின் வெளியில் நடைபெறும் போராட்டங்கள் மூலமோ எம் உரிமைகளைப் பெறுவதற்கு ஐரிஷ் மக்களைப் போலத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் ஒரே கட்சியாகச் செல்லவேண்டுமென்று விளக்கினேன். இதில் முதல் பகுதியை மாத்திரம் சில சிங்களப் பத்திரிகைகள் பிரசுரித்திருக்கலாம். ஆனால் ஐக்கிய முன்னணி வெற்றிக்கு இது காரணமல்ல. **1956**-ல் மக்கள் ஐக்கிய முன்னணி அடைந்த அமோக வெற்றிக்கு யார் காரணம்? இடதுசாரி ஒற்றுமையும் இரண்டு கொத்து அரிசியும் **1970**-ல் முன்னணி வெற்றிக்குக் காரணமேயன்றி என் பேச்சல்ல. ஏற்பட்டது எஸ். எல். எஃப். பி. அரசாங்கமல்ல. ஐக்கிய முன்னணி அரசு.

செ. குணபாலன்,
யாழ்ப்பாணம்.

★ ஈழத்தமிழகத்தின் முதலமைச்சராக தந்தை செல்வா வந்தால், அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கும் தமிழ்ப்பிரமுகர்களின் நிலை என்னவாகும்?



தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னிக்குமாறு ஆண்டவனிடம் வேண்டிய யேசு வழியில் நடப்பவர் தந்தை செல்வா.

க. சொக்கலிங்கம்,
யாழ்ப்பாணம்.

★ தி. மு. க. அண்ணா அவர்களை இலங்கை தமிழ் மக்களில் பலர் பாராட்டுகிறார்கள். அப்படி ஈழத்து தமிழ் அண்ணா அவர்களைப் பாராட்டும் மனப்



பான்மையை இந்தியத் தமிழ் மக்களில் ஒரு சிலரிடமாவது எதிர்பார்க்கமுடியுமோ?

அண்ணாவின் தரத்திற்கு இங்கொரு அண்ணா தோன்றினால் நிச்சயம் பாராட்டுவார்கள். ஆறுமுகநாவலரையும் விபுலாநந்த அடிகளையும் பாராட்டவில்லையா!

உ. இ. றஞ்சித், யாழ்ப்பாணம்.

★ தமிழர் கூட்டணி தற்போது சாத்வீகப் போராட்டம் நடத்துகிறது. சிலவேளை சாத்வீகம் அதிகார வர்க்கத்திடம் தோற்று ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டால்....?

தர்மம் தோற்றது கிடையாது. தர்மத்தை வெல்லவைக்க வில்லினை எடடா என்றார் கிருஷ்ணன் அர்ச்சுனனை. காண்டீபம் தர்மத்தை வெற்றிபெறச் செய்தது. இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது என்று வள்ளுவர் கூறினார்.

என். அமிர்தவாணி, பண்ணாகம்.

★ 1957 ஆம் ஆண்டு ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தின் போது தங்கள் வாகனத்தில் (ஈ. என். 4950) தமிழில் எழுத்துக்கள் பொறித்த தகட்டை பொருத்தியிருந்தீர்கள். தற்பொழுது ஈ. என். எழுத்துக்களையுடைய வாகனம் வைத்துள்ள தாங்கள் தமிழில் இவ்வெழுத்துக்களைப் பொறிக்காததேன்?

தனிச்சிங்களச் சட்டத்திற்கு எதிர்ப்புநடவடிக்கைகளில் ஒன்றாக ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் நடத்தப்பட்டது. பின்பு அது கைவிடப்பட்டு கச்சேரியில் சத்தியாக்கிரகம் செய்தோம். அதையும் பின்பு கைவிட்டு வேறு இயக்கங்களை ஆரம்பித்தோம். போராட்ட இயக்கத்தை மாற்றிய பின்பு பழைய வழியில் மீண்டும் செல்ல முடியுமா? கச்சேரி வாசலில் 1961ல் சத்தியாக்கிரகம் செய்தோம். இப்போது நீங்கள் ஏன் அங்கே போய் இருக்கவில்லை என்று கேட்கலாமா?

''கோட்டா நூல் எடுக்கப் பணமில்லையே அத்தான்?''
''கவலைப்படாதே! நெசவு செய்த துணிகள் எல்லாவற்றையும் கொடுத்து உடனே பணம் வாங்கக் கூடிய ஒரு இடம் இருக்கிறது:-
நியூ தர்சனாஸ், 51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இ. செல்வரத்தினம், அச்சுவேலி.


★ அமிர் அண்ணு, உங்கள் இலட்சோபலட்சம் அன்புத் தம்பியர்களில் ஒருவனுகிய நான் சிறையை நிரப்புகின்ற போராட்டக்காரனுகவே இருக்க விரும்புகின்றேன். இதில் நீங்கள் எப்படிப்பட்ட போராட்டக்காரனுக இருக்க விரும்புகிறீர்கள் ?

சிறையை உடைப்பதற்கும் முதலில் உள்ளே போகவேண்டும். நாட்டிலுள்ள சிறிய சிறைச்சாலைகளை நிரப்புவதன் மூலமே நாடாகிய சிறைச்சாலையை உடைத்து விடுதலைபெற்றுர்கள், உலகின் பல நாடுகளையும் விடுவித்த வீரர்கள். இந்தப் பெரிய சிறையை உடைக்கிற போராட்டக்காரனுகவே நான் இருக்க விரும்புகிறேன்.

எஸ். எம். தாஸ், திருமலை.

★ இலங்கை வாழ் தமிழ் பேசும் பொது மக்களின் விடிவெள்ளியான தந்தை செல்வா தமது அரசவை அங்கத்துவ பதவியை தூக்கியெறிந்துவிட்டு தமது அசைக்கமுடியாத கொள்கையை ஆட்சியாளருக்கு வெளிப்படுத்தியுள்ளார். இதனுல் எமக்கு பிரதி பலன் கிட்டுமா!

விடிவெள்ளி தோன்றினுல் உதயசூரியன் கிளம்ப அதிக நாளிகை செல்லாது. தந்தையின் தியாகத்தினுல் சுதந்திர சூரியன் உதிக்குமென்றே நம்புகிறேன்.



த. பத்மநாதன், கொழும்பு.

★ உடுவில் தொகுதி நா. உ. பற்றிச் சில வரிகள் கூறுவீர்களா?

தமிழர் கூட்டணியின் ஒரே யொரு முழுநேரத்தொண்டர். வன்னியர் வழியில் உழைக்கும் கடமை வீரர், எல்லோருக்கும் நல்லபிள்ளை.


★ உங்கள் ஆதரவாளர்களின் புகழ்ச்சியினுல் நீங்கள் தடுமாறிய சம்பவங்கள் ஏதும் உண்டா?

புகழ்ச்சிக்குப் பின்னுல் இருக்கும் நோக்கத்தை அறிந்திருக்க வேண்டிய நியாயவாதி நான். எனவே தடுமாறும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

திருமலை சுந்தா.

★ தி. மு. க. பிளவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தமிழகத்தின் பெரு நஷ்டம். கடல் கடந்த தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம். த[illegible]மனிதர் எவரிலும் பார்க்க இயக்கம் பெரிது



க. இந்திரகுமார்,
வெள்ளவத்தை.

★ த. கா. தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூட்டு முன்னணியில் சேராதது ஏன்? விளக்கம் தருவீர்களா?

தமிழ் காங்கிரஸ் அதன் தலைவர் திரு. பொன்னம்பலத்தின் பூரண சம்மதத்தோடு தமிழர் கூட்டணியில சேர்ந்திருக்கிறது. தமிழ் காங்கிரசையும் திரு. பொன்னம்பலத்தையும் யாரும் பிரிக்க முடியாது.

★ வட்டுக்கோட்டைத் தொகுதியின் தற்போதைய பா. உ. க்கும் தங்களுக்கும் இடையில் சென்ற தேர்தலுக்குமுன் எப்போதாவது சந்திக்க வாய்ப்புக்கிடைத்ததா? கிடைத்ததாயின் ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியைக் கூறமுடியுமா?

காரைநகரில் வலந்தலை உபதபாற் கந்தோர் திறப்பு விழாவில் அவர் தலைமை தாங்க நான் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. நான் பேசிய பின்பு தேவையற்ற சில குறிப்புகள் கூறினர். நான் குறுக்கிட்டு ஆட்சேபித்ததின் பேரிலும் மக்கள் கூக்குரலிட்டதனாலும் தன் பேச்சை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது.

பொன் இராசையா, மாவுசா

★ சென்ற தேர்தலில் நீங்கள் தோல்வி கண்டதற்கு காரணம் என்ன?

என் கவலையீனமும் மாற்றாரின் பணபலமும்.

★ தமிழரசுக் கட்சியின் பெயரே ஒரு வகுப்புவாதக் கட்சி என்று எடுத்துக்காட்டுவதாகப் பலர் அபிப்பிராயப்படுவதால், இப்பொழுது முன்னணியில் நிற்கும் கட்சிகளாகிய யு. என். பி. லங்கா சுதந்திரக் கட்சி போல் தமிழரசுக்கட்சியை இலங்கை நாஷனல் கொங்கிரஸ் (***Ceylon National congress***) போன்ற பெயர்களால் பெயர் மாற்றம் செய்தால் நலமாக இருக்கு மல்லவா?

தமிழரசுக்கட்சி இனவிடுதலை இயக்கம். ஈழத்தமிழ் மக்கள் தனித்தேசிய இனம். சரித்திரம், மொழி, மதம், பாரம்பரியம், உள்ளுணர்ச்சி - 'எல்லாவற்றிலும் ஸ்டாலின் வகுத்த வரைவிலக்கணப்படி தனியினம். இனத்தின் பேரால் இனத்தின் உரிமைகோரி இயக்கம் நடத்துவது வகுப்பு வாதமல்ல. ஜரிஷ்விடுதலை இயக்கம் வகுப்புவாதமா? எனவே பெயரை மாற்றவேண்டிய தேவையில்லை.

(26-ம் பக்கம் பார்க்க)

'புறப்பொருள் வெண்பா மாலை' என்பது ஒரு பழைய இலக்கியம். தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் என்பவற்றின் புறப்பண்பாடுகளை எடுத்துக் கூறுகிறது இந் நூல். இந்நூலுக்கு ஒரு சிறந்த ஆராய்ச்சியுரை எழுதி வெளியிட்டிருக்கிறார் புலவர் நா. சிவபாதசுந்தரம். வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் இதை வெளியிட்டிருக்கிறது. பெரியவிஷயம். பெரிய புத்தகம். அழகிய பதிப்பு. விலை ரூபா 20. தமிழ் நாட்டிலும் இலங்கையிலுமுள்ள பல பேரறிஞர்கள் புலவருடைய முயற்சியை மிகவும் பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் கரையூர்ப் பகுதியில் தொடங்கிய சாதிக் கலவரங்கள் மாதக் கணக்கில் நீடிக்கின்றன. பொலிஸ், ராணுவ பலத்தினாலும் அதை அடக்க முடியவில்லை. கடைசி முயற்சியாக 'எஸ்.பி.' சுந்தரலிங்கம் பல பொதுக் கூட்டங்களை நடத்தி வேறு பல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார். இவ்வளவோடு இந்தக் கலவரங்கள் அடங்கி விடுமானால் சுந்தரலிங்கத்துக்கு ஒரு பெரிய 'சபாஷ்' கிடைக்கும்!

'யூனெஸ்கோ' நிறுவனம் சிறுவர்களுக்கான ஒரு சிறு நூலை இலங்கையில் வெளியிடப் போகிறது. இதில் ஒரு புதுமை. தமிழ், சிங்களம், ஆங்கிலம், மூன்று மொழிகளிலும் இந்தஒரே நூலில் விஷயங்கள் இருக்கும்! நூலை அச்சிடும் முறையில்கூட மூன்றுவிதமான வழிகளைக் கையாளப் போகிறார்கள்!

தங்கள் உடம்பு பருத்துக் கொண்டுபோவதைக் குறித்துக் கவலைப்படுகிறவர்கள் பலர். உடம்பின் நிறையைக் குறைத்து மெலிய வேண்டுமானால், உணவு வகைகளில் சிறிது கட்டுப்பாடு இருத்தல் அவசியம். இனிப்புப் பண்டங்கள், கோப்பி, தேனீர் முதலிய பானங்களை முற்றாக நிறுத்திவிட வேண்டும். கேக் வகைகள், சொக்லேட்டுகள், நெய், வெண்ணை முதலிய கொழுப்புப் பொருள்களையும் நீக்கிவிட வேண்டும். இரவுச் சாப்பாட்டுக்குப் பதிலாக ஒரு கிளாஸ் பாலை மட்டும் பருக வேண்டும். இப்படிக் கிரமமாகச் செய்து வந்தால், ஒரு மாத காலத்திலேயே ஓரளவு பலனைக் காணமுடியும்!



ஒரு எழுத்தாளராக இருந்து இயக்குநர் ஆனவர் ஸ்ரீதர். ஒரு காலத்தில் ஸ்ரீதரின் படமென்றால் அதில் ஏதாவது புதுமை இருக்கும்; கருத்து இருக்குமென்று ரசிகர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கை இப்போது போய்விட்டது. 'தமிழ் சினிமா உலக'த்தோடு ஸ்ரீதர் இப்போது இரண்டறக் கலந்து விட்டார்! உதாரணம்: 'அவளுக்கென்று ஓர் மனம்'

# பண்டிதமணியின் பார்வை என்மீது படுகிறது......

1937-38 ஆம் ஆண்டுகளில் நான் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாகப் பயின்று கொண்டிருந்தேன். அக்காலத்தில் பாடவகைகளிலும் பார்க்கப்படிப்பித்தல் பயிற்சியில் தேறுவதே ஒவ்வொரு மாணுக்கனும் முக்கிய வேலையாக இருந்தது. அதற்கான மாதிரிகைப் பாடங்கள் ஆசிரிய கலாசாலைக்குள் நடக்கும். ஒரு ஆசிரியமாணவன் பன்னிரண்டு பிள்ளைகளை அழைத்து வந்து இலக்கிய பாடமொன்றையோ கணித பாடமொன்றையோ நடாத்துவான். அந்த அந்தப் பாடத்துக்குரிய விரிவுரையாளர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள். உடன்பயிலும் ஆசிரிய மாணவர்களும் அவர்படிப்பிப்பதை மிகநுணுக்கமாக அவதானித்துக் குறிப்பெழுதிக்கொண்டிருப்பார்கள்.

பாடம் முடிந்ததும் அன்று நடந்த படிப்பித்தலைப்பற்றி ஆசிரிய மாணவர்களில் சிலர் 'அக்கு வேறு ஆணிவேருக' விமர்சிப்பார்கள். பொதுவாக கண்டனங்கள்-குறைகள்-தான் மிகுதியாக இருக்கும். இறுதியாக படிப்பித்தவர் அக்கண்டனங்களுக்கெல்லாம் விடை கூறுவர். முடிவில் அவதானித்துக் கொண்டிருந்த விரிவுரையாளர் தமது அபிப்பிராயத்தை வெளியிடுவார். இந்தக் 'கண்டன பாடம்' -அதை அப்படித்தான் அக்காலத்தில் சொல்லுவார்கள்- ஒவ்வொருமாணவனுக்கும் 'செத்துப்பிழைக்கும்' பாடம்போலவே இருக்கும். நான் தொடர்ந்து 1933 — 38 வரை அந்தச் சூழலிலே வாழ்ந்தவன். ஆகையால் பல வகுப்புகளுக்கு மாணவனுகச்சென்றிருக்கிறேன். நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் படிப்பித்ததை அவதானித்திருக்கிறேன். பலர் கூறிய கண்டனங்களையும் பதில்களையும் கேட்டிருக்கிறேன். எனவே எனது வகுப்பில் எந்த ஒரு ஆசிரிய மாணவன் படிப்பித்தாலும் விரிவுரையாளர்கள் எனது அபிப்பிராயத்தைக் கேட்பார்கள். நானும் துணிச்சலாக-ஓரளவு நுணுக்கமாக - கூறிவிடுவேன்.

•

திருநெல்வேலி பரமேஸ்வரக்கல்லூரியில் அந்த ஆண்டில் தான் பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆரம்பமாயிருந்தது. எங்கள் ஆசிரிய கலாசாலையில் எப்படி இந்த மாதிரிகைப்பாடம் நடைபெறுகிறது என்பதைப் பார்க்க அங்கு படிக்கும் ஆசிரிய மாணவர்கள் விரும்பினர்கள்.

எனவே மூன்று பாடங்கள் அவர்களுக்காக நடத்திக் காட்டினேம். இந்தக் காலக்கட்டத்தில் இலக்கிய பாடத்திட்டம்பற்றிய ஒரு பிரச்சினையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் போர்க் கொடி உயர்த்தி மூர்க்கமாக வாதாடிக் கொண்டிருந்தார்கள். விடயம் இதுதான். தேம்பாவணி என்ற நூலின் ஒரு பகுதி ஆசிரிய மாணவர்களின் இலக்கியபாடத் திட்டத்தின் ஒன்ருய் அமைந்திருந்தது. அது சைவாசிரிய மாணவர்களுக்கு வேண்டியதில்லை என்பது பண்டிதமணி அவர்களது வாதமாகும். பண்டித பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்தவர்கள் தேம்பாவணியை மறைமுகமாக ஆதரித்தார்கள்.


இலக்கிய பாடம் ஒன்றை மாதிரிகைப் பாடமாக நடாத்தும் சந்தர்ப்பத்தைப் பண்டிதமணியவர்கள் இதற்குப் பயன்படுத்தினர்கள். பரமேஸ்வரப் பண்டித கலாசாலையைச் சேர்ந்த மாணவர்களும், சைவாசிரிய கலாசாலையைச் சேர்ந்த மாணவர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கூடியிருந்தோம்.

எங்கள் வகுப்பு மாணவர் ஒருவர் பாடத்தை நடாத்திக்கொண்டிருந்தார். உபஅதிபர், சிந்தனைச் செல்வர் கைலாசபதியவர்கள் படிப்பித்தலை மேற்பார்வை பார்க்கும் நடுநாயகமாக வீற்றிருக்க பண்டிதமணி, அதிபர் சுவாமிநாதன், பண்டிதபயிற்சிக்கலாசாலை அதிபர் கு. சிவப்பிரகாசமவர்கள் முதலிய பல ஆசிரியர்களும் பக்கத்திலே அமர்ந்திருந்தனர். பாடம் நடக்கும் முறையைநன்கு அவதானித்து வேண்டியகுறிப்புகளை எங்களில் பலர் எழுதிக் கொண்டிருந்தோம். உப அதிபர் தலைமைவகிக்கும் பாடங்களில்-படிப்பித்தல்களில் - இலேசாகக்கண்டனஞ் சொல்லித்தப்ப முடியாது. ஆழமாக, முறையாக கச்சொல்ல வேண்டும். அல்லது கேள்விமேல் கேள்வி போட்டுத் துளைத்து எடுத்துவிடுவார்.

''ஓசை பெற்றுயர் பாற்கடல்
உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு
புக்கெண''

என்ற கம்பராமாயண அவையடக்கச் செய்யுளையும், அதனை அப்படியே படிஎடுத்த தேம்பாவணிஅவையடக்கச் செய்யுளையும் அந்த ஆசிரிய மாணவர் படிப்பித்துக்கொண்டிருந்தார்.

'அவர் இரு செய்யுள்களின் பொழிப்புரை, பதவுரை, விளக்கம் என்றிவைகளை நடத்திப்பின் 'நன்கவி' 'புன்கவி' இயல்புகளை கம்பரில் எடுத்துக்காட்டி, அதன்மேல் மேற்காட்டிய செய்யுள்கள் எவ்வகையைச் சேர்ந்தவை என்று வினவி விரும்பியவாறு



இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன்

விடைபெற்றுக்கொண்டு பிறகு அச்செய்யுள்கள் எங்கே யுள்ள வைகள்? ஆக்கியோர் யாவர்? என வினவித் தெரிவித்தார்.

பாடம் முடிந்தது. மறைமுகமாகப் பாடப்புத்தகம் விதிப்பவர்களைத் தொட்டுக்காட்டுவதாயிருந்தது.

பாடத்தை நடாத்தியஆசிரியர் வெற்றிகரமாகப் பாடத்தை முடித்துவிட்டார். அதன்மேல் குறிப்புரை கூறும் சங்கடமான நிலை.

அநேகமாக எல்லாப்பாடங்களுக்கும் குறிப்புரை கூறிவந்த நான் அன்று மாத்திரம் பின்வாங்கமுடியாது. அப்படியாகப்பின் வாங்க உபஅதிபர் விடவும்மாட்டார்.

எனவே எனக்குப் பக்கத்திலே இருந்த ஆசிரிய மாணவர் ஒருவரை ஏதாவது சொல் என்று தூண்டினேன். அவரும் ஏதோ சொல்லி முடித்தார்.

உபஅதிபரின் பார்வை என் மேல்பட்டது படாமுன் எழுந்து நின்றேன். ஆசிரியர் பாடத்துக்குச்சொல்லிய முன்னுரையிலிருந்து ஒவ்வொரு அம்சத்தையும் கையாண்ட விதம் வரை ஒரளவு கண்டனத் தொனியுடன் விமர்சித்தேன்.

என்னுடைய குறிப்புரையைப்பற்றிப் பண்டிதமணியவர்கள் இருபத்தைந்து வருடங்களுக்குப்பிறகும் ஞாபகத்தில் வைத்திருந்து பின்வருமாறு எழுதியுள்ளார்கள். அது பின்வருவது:

''கனக செந்திநாதன்கூறிய குறிப்புரை நுட்பமும் விவேகமும் படைத்ததாக இருந்தது. அக்குறிப்புரையை டாக்டர் கு. சிவப்பிரகாசம் பெரிதும் பாராட்டினர். அன்று தொடக்கம் செந்திநாதன் மேல் ஒரு கண் இருந்தது. அதனுல் பயிற்சி முடிந்தபிறகும் செந்திநாதனின் தொடர்பு இன்றுவரை வளர்ந்து கொண்டே இருக்கிறது.''

திருநெல்வேலி ஆசிரியகலாசாலையில்பெற்ற இந்தப்பயிற்சி எழுத்து - பேச்சு என்ற பாடங்களில் நான் பெற்ற அனுபவங்கள் பண்டிதமணி, உபஅதிபர் என் போரது அருள் நோக்குகள் எல்லாம் என்னை எழுத்துலகில் ஒரளவு விமர்சகனுக நிலைபெறச் செய்துள்ளன.

ஆயிரம் பரிசுகள்பெறலாம்; ஒன்று கூடப்பெருமல்போகலாம். பண்டிதமணி போன்ருேரது வாயினுல் - எழுத்தால்-இப்படி ஒரு நன்மதிப்பைப் பெறுவது இலேசான காரியமல்ல.

என் நெஞ்சு குளிர்கிறது! ●

---

■ 'கொன்கோட்' என்ற விமானங்களை ஆங்கிலோ—பிரான்சு கூட்டமைப்புத் தாபனம் தயாரிக்கிறது. இந்த விமானம் ஒலியிலும் பார்க்க வேகமாகச் செல்லக்கூடியது! மிக முன்னேறியுள்ள விமானக் கம்பனிகள் பல இந்தப்புதிய விமானங்களுக்கு 'ஓடர்' கொடுத்திருக்கின்றன. பி. ஓ. ஏ ஸியும் ஏயர் பிரான்சும் 9 விமானங்களுக்கு ஓடர் கொடுத்திருக்கின்றன. மக்கள் சீனக் குடியரசு மூன்று விமானங்களுக்கு விண்ணப்பித்திருக்கிறது. 'ஏயர் ஈரான்' கூட இரண்டு விமானங்களை வாங்கப் போகிறது.

வைத்தியரின் மகன் வைத்தியராகவும், ஆசிரியரின் மகன் ஆசிரியராகவும் வருவது போல, நடிகரின் மகனும் நடிகராக வரும் வழக்கம் வந்திருக்கிறது. எம். ஆர். ராதாவின் மகன், எஸ். எஸ். ஆரின் மகன், —இவர்களைத் தொடர்ந்து, சமீபத்தில் காலம் சென்ற சிறந்த குணசித்திர நடிகர் பாலையாவின் மகன் ரகுவும் நடிப்புலகுக்கு வந்திருக்கிறார். 'தங்கத்துரை' என்ற படத்தில் இவர் நடிக்கிறார் !

சிறந்த மருந்துகளாலும் மாற்ற முடியாத பல நோய்களை, முறையான உடற்பயிற்சிகள் மாற்றி விடுகின்றன. லூயி பாஸ்டர் தமது 46-வது வயதில் பக்க வாத நோய்க்கு ஆளானார். உடல் உழைப்பு சிறிதுமில்லாமல் மூளைக்கு மட்டுமே வேலை கொடுத்து வந்ததே இந்த நோய்க்குக் காரணமென அறிந்து, வைத்தியர்களின் ஆலோசனைப்படி முறையான சில உடற்பயிற்சிகளைத் தினமும் செய்யத் தொடங்கினார். மேலும் முப்பது வருடங்கள் அவர் நல்ல சுகதேகியாக வாழமுடிந்தது !

'லவ்வோஸ் வாட்கின்ஸ்' என்பவர் உலகப் பிரசித்தி பெற்ற ஒரு நீக்ரோ பாடகர். இவர் சமீபத்தில் தமது மனைவியுடன் தென்னாபிரிக்க நகரமான ஜோகானஸ் பார்க்குக்குப் போயிருந்தார். அங்கே இவருடைய இசையைக் கேட்க சங்கீத ரசிகர்கள் துடியாய்த் துடித்தார்கள். ஆனால் வாட்கின்ஸ அந்த நகரத்தில் ஒரு நிகழ்ச்சியை நடத்த மறுத்துவிட்டார்: ஏன் தெரியுமா ? ஜோகானஸ் பார்க்கில் வாட்கின்ஸ் தங்கியிருந்த பெரிய ஹோட்டலில் அவரையும் அவரது சொந்த மனைவியையும் ஒரே அறையில் தங்கியிருக்க அனுமதி மறுத்துவிட்டார்கள் ! நிறத்துவேஷத்தைச் சட்டபூர்வாக வைத்திருக்கும் தென்னாபிரிக்காவில்ஒரு கறுப்பு - வெள்ளை ஆண் பெண் ஜோடி ஒரே அறையில் தங்கக் கூடாது ! (உடலுறவு வைத்துக்கொள்ளக் கூடாது !) இந்த அநாகரிக சட்டத்தை எதிர்த்துத்தான் வாட்கின்ஸ் அங்கே இசை நிகழ்ச்சி நடத்த மறுத்தார். அவருடைய மனைவி ஒரு வெள்ளைக்காரி! ஆபிரிக்கக் கண்டத்திலேயே இப்படி ஒரு இராச்சியம் இருப்பது மனித குலத்திற்கே வெட்கக்கேடு !

அமெரிக்காவை முதலாளித்துவ நாடென்றும், ரஷ்யாவை சோசலிஸ முதலாளித்துவ நாடென்றும், இந்தியாவைப் பேராசைக்கார நாடென்றும், யப்பானை யுத்த வெறி நாடென்றும் தோழர் சண்முகதாசன் கூறியிருக்கிறார். ஆனால் அவர் போற்றுகிற மக்கள் சீனா, சமீபத்தில் பங்களா தேசத்தை ஐ. நா. சபையில் சேரவிடாமல் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறதே: இந்தச் சீனாவை எத்தகைய நாடென்று கூறுவது ?

மனித உடலிலுள்ள எல்லா நரம்புமண்டலங்களையும் கட்டி ஆளுவது மூளைதான். ஒருவன் மது அருந்தினால் அந்த மது முதலில் தாக்குவது மூளையைத்தான் !

சிறு குழந்தைகளுக்கு காக்கை வலிப்புப்போன்ற வலிப்புகள் வருவது கூடாது. அவ்வித வலிப்புகள் வரும் குழந்தைகள் அறிவுத்திறமையுள்ளவர்களாய் வளரவே முடியாமல் போய்விடும். வலிப்பு வரும் குழந்தைகளை உடனடியாக தகுந்த வைத்தியரிடம் காட்டிஏற்றவைத்தியம் செய்வித்தல் வேண்டும்.

காலம் சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவியாக இருந்தபோது ஜாக்குலின் உலகப் புகழ் பெற்றவராக விளங்கினார். இப்போது கோடீஸ்வரர் ஒனாசிசின் மனைவியாகி விட்டபோதும் ஜாக்குலினின் புகழ் குறையவில்லை. ஆனால் இரண்டு புகழுக்குமிடையில் எவ்வளவு வித்தியாசம்! ஜாக்குலின் கென்னடி ஒரு கௌரவமான சீமாட்டியாகப் புகழ் பெற்றிருந்தார். ஜாக்குலின் ஒனாசிஸ், ஒரு சினிமா - ஸ்டார் போல, கவர்ச்சிப் பாவைக்குரிய புகழ் பெற்றுக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் அவருடைய முழு உருவ நிர்வாணப் படத்தை எவ்வளவோ கட்டுக்காவல்களுக்கிடையில் வண்ணப் போட்டோவாக எடுத்து இத்தாலிய சஞ்சிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது — ஜாக்குலின் புகழ் இப்போது இந்தமாதிரித்தான் வளர்கிறது!



அரசியற் கட்சிச் சண்டைகளைவிட, சாதி, சமய, இனப் பூசல்கள், நம் நாட்டில் அபாயகரமானவை: என்ன காரணம்? அரசியல் ஈடுபாட்டைவிட, சாதி, சமய, இன விஷயங்களில் நமது நாட்டு மக்களுக்கு ஈடுபாடு அதிகம். அரசியல் கட்சிகள் இந்தப் பரம்பரையில் மட்டுமே தோன்றியவை. சாதி, சமய, இனக் கருத்துக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக, பரம்பரை பரம்பரையாக நமது மக்களில் ஊறிப்போயிருக்கின்றன !—போதாததற்கு இந்த நெருப்பு அணைந்து போகாமல் அடிக்கடி யாராவது ஊதிக் கொண்டே இருக்கிறார்கள் !

சீனாவின் முக்கிய நகரங்கள் எல்லாவற்றுக்கும் கீழே பாதாளத் தெருக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நகரின் மேலேயுள்ள தெருக்களிலிருந்தும், வீடுகள், கடைகள் தொழிற்சாலைகளிலிருந்தும், இந்த பாதாளத் தெருக்களுக்குச் செல்ல வழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பகைவரின் விமானத் தாக்குதலிலிருந்து தங்களை தற்காக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அபாய அறிவிப்புக் கொடுககப்பட்ட ஐந்து நிமிட நேரத்திற்குள் நகரத்திலுள்ள எல்லா மக்களும் இந்தப் பாதாள நகரத்துக்குச் சென்றுவிட முடியும். இந்தப்பாதாள நகரங்களில் மின்சாரம், தொலைபேசி, வானொலிச் சேவைகள் எல்லாம் உண்டு. வைத்தியச் சேவைகளும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவசியமான பொருட்களை வாங்குவதற்குக் கடைகள்கூட அங்கேஉண்டு!

சிலர் எப்போதும் கடந்து போன துயரச் சம்பவங்களைப் பற்றியே நினைத்துக் கவலைப் பட்டிடுக்கொண்டிருப்பார்கள். அல்லது எதிர்காலத்தில் தமக்கு என்னென்ன விதத்தில் கஷ்டங்கள் வரக்கூடுமென்று கற்பனை செய்து கவலைப்படுவார்கள். இந்தக் குணம் அவர்களுடைய வாழ்க்கையையே நாசமாக்கி விடும்! கடந்துபோன துயரங்களை மீட்டு நினைத்துக்கொண்டிருப்பதால், என்ன பயன்? அதே போல எதிர்காலத் துன்பங்களை கற்பனை செய்வதிலும் எவ்வித பயனுமில்லை. உண்மையில் வரக் கூடுமென்று நிச்சயமாக எதிர் பார்த்திருந்த துயரங்களே பலருடைய வாழ்க்கையில் எப்படியோ வராமல் போய்விடுவதைப் பார்க்கிறோம். அப்படியான சம்பவத்தை எதிர்பார்த்துக் கவலைப் பட்டதனால் பயன் என்ன? — இயன்றவரை எந்நேரமும் மகிழ்ச்சியான சிந்தனைகளுடன் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சிலர் எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையிலும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். சிலருக்கோ எவ்வளவு வசதிகள் இருந்தாலும் சதா எதையாவது நினைத்துத் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அவரவர் 'தலைவிதி' யல்ல; அவரவர் பழக்கம்!

ரஷ்யா தனது மேற்கு ஐரோப்பியப் பகுதியில் 33 டிவிசன் துருப்புக்களை வைத்திருக்கிறது. ஆனால் சீன எல்லையோரத்தில் 44 டிவிசன் துருப்புக்களைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஜப்பானியரின் போர்க் கூவலுக்கு எதிராக நிறுத்தப்பட்ட ரஷ்யப் படைப் பலத்திலும் பார்க்க இது மிகவும் அதிகமானதென்று சொல்லப்படுகிறது. சீனாவைப்பற்றி ரஷ்யா மிகவும் அச்சம் கொண்டிருக்கிறது என்பதுமட்டுமல்ல; சீனாவின் படைபலத்தில் மிகுந்த மதிப்புக் கொண்டிருக்கிறதென்பதையும் இது காட்டுகிறது!



பாகிஸ்தானின் நிலைமை படு மோசமாக இருக்கிறது. அந்த நாட்டின் அதிபரான பூட்டோ தாம் நினைத்தபடி வெளிவிவகாரக் கொள்கைகளைக் கொண்டு நடத்த முடியாமலிருக்கிறார். வெளியிலுள்ள கரைச்சல்களை இயன்றவரை சமாதானமாகத் தீர்த்துக் கொண்டு, மோசமாகிவிட்ட உள்நாட்டு அபிவிருத்தியில் கவனம் செலுத்தலாமென்று பூட்டோ நினைக்கிறார். ஆனால் ஆவேசம் கொண்ட அந்நாட்டு மக்கள் இந்தியாவுக்கெதிராகவும்பங்களா தேசத்துக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்களை அப்படித் தூண்டி விடுவதற்கு அந்தநாட்டில் சில பலம் வாய்ந்த சக்திகள் இருக்கின்றன. பூட்டோவின் நிலைமை பரிதாபத்துக்குரியது!

# "மௌனத் கல்யன்"

## ஒரு மெஞ்ஞானி & விஞ்ஞானி

போன கிழமை எனக்கு ஒரு கடிதம் வழக்கத்திற்கு விரோத மாக ஓர் ஆண்வாசகரிடம் இரு ந்து வந்தது. அதைப்படித்ததும் என்னுடைய அரும்பு மீசை துடித்தது. கடிதம் – உங்களுக்கா கக்-கீழே தொடருகிறது:

"என்னய்யா மௌனத்கல்யன்! உன்னுடைய ஏதாவது ஒரு கதை யிலாவது கற்பனை ஒரு மில்லிகி ராமாவது இருக்கிறதா? என்ன 'கதை' எழுதுகிறுய்? பெண்களே இல்லாமல் ஒரு கதை யா வது எழுத முடியுமா?..."

அதற்கு மேலே உங்களுக் கும், எனக்கும் சம்பந்தமில்லாத வார்த்தைகள். அவற்றை நான் சென்ஸர் செய்யாவிட்டாலும், 'வெள்ளி' ஆசிரியர் கட்டாயம் செய்வார். ஆகவே அவை உங் களுக்கு வேண்டாம். இனி கதைக்கு வருவோம்.

பெண்களே இல்லாத கதை இது. இதைவிட சோகமான கதை என்னுல் இனி எழுதமுடி யாது. பெண்களைப் பற்றி எழு தாத படியினுல் ஆண்கள் இதைப் படிப்பார்களோ தெரியவில்லை; ஆகவே முன்னெச்சரிக்கையாக, இது 'பெண்களுக்கு மட்டும்' எனச் சொல்லி வைக்கிறேன்.

இனி இந்தக் கதையில் பிரம் மாண்டமான 'கற்பனை' ஒன்று இருக்கிறது. சத்தியமாக என் னுடையதே! என் லதா மீது ஆணை. மன்னிக்கவும் பெண்ணின் பெயர் வாய் தடுமாறி வந்து விட்டது.

ஏன்? எப்படி என்று கேள்வி கேட்கக் கூடியவர்கள் இந்த கதை யைவாசிக்க வேண்டாம்.

இந்தக் கதையில் வரும் சம் பவங்கள் கி. பி. 2972இல் நடக் கப்போகிறது. அப்போதைய நிலைமை:-

இலங்கை பொருளாதாரத் துறையிலும், விஞ்ஞானத்திலும் ம(பெ)ண் வளத்திலும் முன் னேறி உலகிலேயே முதலிடம் வகிக்கிறது. — கற்பனை எப்படி ஐயா? இதையும்விட முக்கிய மான விஷயம் என்ன தெரியுமா? தமிழர்களும், சிங்களவர்களும் ஒருவரை ஒருவர் விடாமல் கட் டியணைத்தபடி சந்தோஷமாய் இருக்கிருர்கள் என்பதே! இதை விடப் பெரிய 'கற்பனை' எந்தக் கொம்பனுலும் எழுத முடியாது!

அந்த வேளையில், இலங்கை யின் வளர்ச்சிகண்டு பொறுக்காத வேறொரு நாடு இலங்கையை அழிக்கத் திட்டம் போடுகிறது:

இது அப்போதைய பிரதம மந்திரியான ஏதோ 'ஒரு' நாயக்

காவிற்குத் தெரிந்து விடுகிறது: எப்படி?— '

இதைச்சமாளிக்கும் பொறுப்பு, எமது கதாநாயகனிடம் விடப்படுகிறது ஏன்?—

கதாநாயகன் —பெரிய விஞ்ஞானி:

கதாநாயகனின் அப்பா — பெரிய மெய்ஞ்ஞானி:

கீழே வருவது கதை: இது வரை வந்தது தாலாட்டு.

“கவனம் அப்பா!, பக்கத்திலிருக்கிற பச்சைப்பெட்டியைத் தட்டிப் போடாதேங்கோ”—விஞ்ஞானி:

“சிவ! சிவ!! நான் ஏன் தட்டுறன்? நீ இப்ப என்ன செய்யப்போறாய்?”-மெய்ஞ்ஞானி.


“அப்பாவிற்குத் தெரியுமே ஒரு புதுநியூஸ்? எங்கடை நாட்டை எப்படி எதிரிகள் ‘அட்டாக்’ பண்ணப்போகினம் என்று தெரிந்து விட்டது!”

“எப்படி?”

“அப்பா! உங்களுக்கு விளங்குதோ தெரியவில்லை. சின்னப் பிள்ளைகள், பூதக் கண்ணாடி வைத்துச் சூரிய ஒளிக்கற்றைகளைக் குவித்து நெருப்பு மூட்டி விளையாடுவது தெரியும்தானே?”

“மேலே சொல்லு”

“அது மாதிரி, சூரியனுக்கும் எங்கள் நாட்டிற்கும் இடையே ஒரு பெரிய குவிவு வில்லை ஒன்று வைத்து, சூரிய ஒளிக்கற்றைகளைக் குவித்து எங்களை எரிக்கப்போகிறார்களாம்”



■ டாக்டர் என். எம். மின் புதிய பட்ஜெட் பலருக்கும் பெரிய ஆறுதல் தருவதாகவே அமைந்திருக்கிறது. எப்படி ‘ஆறுதல்’ தந்திருக்கிறது? தலையிலே பெரிய காயம் படப் போகிறதென்று நம்பியிருந்த போது, கையில் சிறு காயமே ஏற்பட்டால் அது ஆறுதல்தானே? பத்துரூபா பணம் கிடைக்குமென்று எதிர்பார்த்த போது அது கிடைக்காமல் கையில் அந்தக் காயம் மட்டும் கிடைத்திருந்தால் பெரிய ஆத்திரம் ஏற்பட்டிருக்கும். பட்ஜெட் வருமுன்னர் ஏதோ பெரிய தாக்குதல் வரப்போகிறதென்றே எல்லாரும் எதிர்பார்த்தார்கள். பிரதமரும் ‘மக்களின் தற்காலிகமான அதிருப்தி கிடைப்பதாயினும் நாட்டின் அபிவிருத்திக்காகச் சில முக்கிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்’ என்று கூறியிருக்கிறார். ஆனால் ஆறுதல் தரும் ‘ஏமாற்றத்தைத் தான் பட்ஜெட்டும் தந்திருக்கிறது!

---

“இதென்னடா, ஒரு நாலஞ்சு றொக்கட்டுகளை - நிறையக் கல்லுகளோடு விட்டால் அந்தக் கண்ணாடி வில்லை சுக்கு நூறாகிப் போகும்”

“உங்களுக்கு விளங்கவில்லை. அது அசல் கண்ணாடி வில்லை இல்லையாம். பத்துப் பதினைந்து

வெவ்வேறு விதமான வாயுக்கள் அடங்கிய வாயுக் கலவை. அவை ஒரு வாயு ஊடகமாகத் தொழிற் படும். பூமி சுழல்கிற வேகத்தி ற்கு ஏற்ப எம்மோடு அமைந்து கொண்டே வரும். அவ்விடத் தில் வருகிற ஒளிக் கதிர்கள் மூறி வடைந்து, ஒன்று குவிந்து எங் கள் சிறு நாட்டை நோக்கி வரு கிறதற்கு எதிரிகள், பல வித மான 'அட்ஜஸ்மெண்ட்' செய்தி ருக்கிறூர்கள் என்று எனக்கு மேலி டத்திலிருந்து அறிவித்திருக்கிறூர் கள்''—விளங்கப்படுத்தி, விஞ் ஞானி களைத்துவிட்டார்.

(உங்களுக்கு ஏதாவது விளங் குகிறதா நண்பரே ?)

''என்னவோ ? எனக்கு ஒன் றும் பிடிபடவில்லை. நீ பதிலுக்கு என்ன செய்யப் போகிறுய் ?'' என்றூர் மெய்ஞானிஅலுப்புடன். விஞ்ஞானியின் கண்கள் மின் னின.

**"I am about to do a great job.** அவர்களுக்கு எதிராக ஒரு வாயுக் கலவை அனுப்பப் போகி றேன்''—என்றூர் பெமையோடு.

சரிவருமா ?

★

விஞ்ஞான ஆய்வுகூடம்.

மினி மறைத்த உடம்பு இன் னும் இரண்டரை அங்குலம் மேலேதெரிய, மேலாடை நழுவ, இதழ்கள் சிரிக்க, கண்கள் சிமி ட்ட, கைகள் .....

இப்படியெல்லாம் பெண்கள் அங்கே இல்லை. சத்தியமாகப் பெண்கள் இல்லவே இல்லை. பதிலுக்கு,

டக், டக, கிர்ர்ர்.......00 (முடிவிலி) - என்றவாறு ஓய்வில் லாத, அவசரமான 'கொம்பி யூட்டர்கள், இயந்திரங்கள், ஃபைல்கள், பேனைகள்,...

எளிதில் விளங்காத சூழ் நிலை.

உங்களுக்கு இது தேவை யில்லை. கதை மேலே போக வேண்டும் இல்லையா ?

''கதை முடிந்துவிட்டது'' என்றூர் எமது விஞ்ஞானி மேல திகாரியிடம். (இந்தக் கதை அல்ல)

''இஸ் இட்? நீங்கள் அனுப் புகின்ற எதிரான வாயுக் கலவை தயாராகிவிட்டதா?'' —என்றூர் மேலதிகாரி இரண்டு கேள்விக் குறிகளுடன்.

''ஃபோர்மூலா ரெடி. மாதி ரிக் கலவையும் தயாராகிப் பரீட் சிக்கப்பட்டுவிட்டது, நிச்சயம் அந்த வாயுக் கலவையை இது போய்க் கலைத்துக் குழப்பி விடும்'' – என்றூர் இளைய விஞ் ஞானி.

''அது தெரியும் எனக்கு. அனுப்பப்போகிற வாயுக்கலவை ரெடியா ?'' என்றூர். பெரியவர் சிறு அதட்டலுடன்.

விஞ்ஞானியின் மகிழ்ச்சி $\frac{5}{16}$ வீதம் குறைந்தது. "கொம் பியூட்டர்' ஆன்சரின்படி இன் னும் இரண்டு நாட்களில் முடிந்து விடும்''— விஞ்ஞானி.

''ம்ஹூம்''— என்றவாறு பெரியவர் வெளியேறினூர்.

ஆனூல்,

'கொம்பியூட்டரி'ன் முடி வில் எப்படியோ, 0·00045 %

பிழை ஏற்பட்டு விட்டது விஞ்ஞானிக்குத் தெரியவில்லை.

'மௌத்கல்ய'னுக்குத்தெரிந்து விட்டது.

★

இரண்டு நாட்களின்பின்,

ஒரு பரபரப்பான சூழ்நிலை. ஆங்கிலத் துப்பறியும் படங்களின் கடைசிக் காட்சிகளில்—வில்லனின் இரகசிய இடத்திலே பலவிதமான ''பீப்-பீப், டிங், டிங்..... ''சத்தங்களுடன் பல விளக்குகள் அணைந்து அணைந்து எரியுமே, பார்த்திருக்கிறீர்களா?

பார்க்காவிட்டால், திரும்பவும் ஒரு முறை கவனமாகப் படிக்கவும்.

அதே நிலைமை எமது விஞ்ஞானக் கூடத்தில் நிலவுகிறது.

இரவு மணி பன்னிரண்டு. (மர்மக்கதைபோல் இல்லை?)கொஞ்சம் 'குளோஸ்-அப்' இல் விஷயத்தைப் பார்ப்போமா?

பழையபடி 'பெரியவர்—சின்னவர்' மோதல்தான் காரணம்!


''யூ . . . ஃபூல் . . . சொன்னேனே கேட்டாயா? எதிரிகளினுடைய வாயுக்கலவை தயாராகி விட்டது. நாளைக்காலை சூரியனுடைய கதிர்களின் பிடியில் நாங்கள் சிக்கிவிடுவோம். நாங்கள் அனுப்ப வேண்டிய 'எதிர் வாயுக் கலவை' இன்னும் தயாராகவில்லையே? என்ன நடந்தது?'' —பெரியவர்.

உடனே சின்னவர் கணக்குக் கேட்கவில்லை. கணக்குக் காட்டினார். ''சேர், இதோ இந்த 'ஈலியம்' வாயுவிலும், 'பிளேற்றோனியேர்' வாயுவிலும், 0·00045 வீதம் பிழை ஏற்பட்டதனால்.''

''Go to hell எனக்குக் கணக்கு வேண்டாம். காரியம் வேண்டும். யூ அண்ட் யுவர் பிளடி . . . ''

''இன்னும் 24 மணித்தியாலத்தில் செய்து விட . . ''

''டுவெண்டிஃபோர் அவர்ஸ்! - இட்இஸ் டூமச். அதற்கிடையில் நாங்கள் சாம்பலாகி விடுவோம். ஒன்லி 5 அவர்ஸ் மோர். அதற்கிடையில் வாயுக்கலவை அனுப்ப வேண்டும். எப்படிச் செய்வீர்களோ! எனக்குத் தெரியாது'' என்று சொல்லி விட்டு பெரியவர் விரைந்தார்.



▮ கருணாநிதியின் அரசாங்கத்தில் ஊழல் நிறைந்து கிடப்பதாகக் காரணம்காட்டி எம். ஜி. ஆர் புரட்சிக் கொடி உயர்த்தியிருக்கிறார். உண்மைதான், எம். ஜி. ஆர். பக்கத்திலும் ஊழல்கள் இல்லாமலிருக்க முடியாது. இந்த மாதிரி ஊழல் குற்றம் சொல்ல முடியாத தமிழகத்தின் ஒரே தலைவர் காமராஜர்தான்! காமராஜரை இப்போது எல்லாருமே தூக்கிவைத்துப் பேசுகிறார்கள். ஆனால் காமராஜர் எவருடைய 'பிடி'யிலும் அகப்படுகிறவராக இல்லை !

அப்போது இன்னொரு இளம் விஞ்ஞானி ஓடிவந்தார்—இவருக்கு என்ன பெயர்வைக்கலாம்? 'சுதன்' ஓடிவந்துவிஞ்ஞானியிடம் சின்னவரிடம்—ஒரு காகிதத்தை நீட்டினார்.

"என்ன சுதன்?"

"சேர், இதற்குரிய ஃபைல் உங்களிடமா இருக்கிறது?"

"ம்...அட, என்னுடைய வீட்டில்தான் இருக்கிறது ... ... வெயிட் . . . நான் உட்னே போய்க் கொண்டு வாறன்"—விஞ்ஞானி காரிலே விரைந்தார்.

★

வீடு:

கிர்ர்—றீச்...

விஞ்ஞானி, டொன் பிரேக் லைனிங் உபயோகித்தார்.

வீட்டின் உள்ளே ஃபைலைத் தேடும் போது, மெய்ஞானி—அப்பா—விழித்துக் கொண்டார்.

"என்ன! இந்த நேரத்தில் வீடு திரும்பி இருக்கிறாய்? என்ன விஷயம்... அ .. உங்களுடைய முயற்சிகள் எல்லாம் வெற்றியா?" என்று 4 கொட்டாவிகளுடன் கேட்டார்.

நீங்கள் இதுவரை இந்தக் கதையைப் படிக்க எடுத்தநேரமளவு நேரத்தில் தன்னுடைய கதையை விஞ்ஞானி மெஞ்ஞானிக்குச் சொன்னார் (பெரியவரின் திட்டுக்கள் நீங்கலாக)

மெஞ்ஞானியின் கொட்டாவிகள் நின்றன. "என்ன செய்யப் போகிறாய்?" என்றார்.

"தேவாரம் பாடப்போகிறேன்"

விஞ்ஞானி ஒரிச்சலுடன் சொன்னார்.

"உண்மையில், அதைத்தவிர வேறுவழியில்லை" என்றார் மெஞ்ஞானி, பாதி கேலியும் பாதி உண்மையுமாக.

"24 மணித்தியாலங்கள் எனக்குத்தந்தால், நான் வாயுக் கலவை தயாரித்து விடுவேன்.. ஆனால் அதற்குள் சூரிய ஒளிக் கற்றைகள் தங்கள் வேலையை ஆரம்பித்து விடுமே?" என்றார் விஞ்ஞானி.

"கொஞ்சம் பொறு. நாளைக்குச் சூரியனே உதித்காவிட்டால், நாம் தப்பி விடலாந் தானே?" — மெஞ்ஞானி.

"ஓஹோ, பதிவிரதை நளாயினி வம்சம் போலிருக்கிறது. சாபமிடப்போகிறீர்களா?" விஞ்ஞானி.

"ஆஹா, நல்ல வழியொன்று இருக்கிறது" - மெஞ்ஞானி.

"என்ன செய்யப் போகிறீர்கள்?"

"I am about to do a great job"— என்றார் மெஞ்ஞானி. உலகத்திரே, கேளும்! கேளும்!! மெஞ்ஞானி, மெய்யாகவே அற்புதம் புரிந்தார். இது உண்மை! உண்மை !!

(சத்தியமாகச் சொல்கிறேன். இது கேலிக்கு எழுதப்படவில்லை.)

மெய்ஞானி பாடினார்,


"வான் முகில் வளாது பெய்க! மலி வளம் சுரக்க—"

என்ற தேவாரத்தைப் பண்ணோடு பாடினார். உடனே பொழிந்தது

■ பாராளுமன்றப் பதவி துறந்த செல்வாவுக்கு யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான ஒரு வரவேற்பு நடைபெற்றது. ஆனால் மட்டக்களப்பில் அவருக்கு நடைபெற்ற வரவேற்பு அதையும் மிஞ்சிவிட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. 'தினபதி' நாளிதழே இதைப்பற்றி மிக விரிவான செய்தியை மூக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருக்கிறதே !

■ பி. பி. சி. ஒலிபரப்பின் மருத்துவப் பகுதி ஒரு புதிய மாத்திரையைப் பற்றி அறிமுகம் செய்திருக்கிறது. அதன் பெயர் 'ஆம்பெடாமின்.' அதிக உழைப்பினால் அலுத்துக் களைத்துப் போயிருக்கும் போது இந்த 'ஆம்பெடாமின்' மாத்திரையைச் சூடான பானத்தில் கலக்கிக் குடித்தால், உடனே புத்துணர்ச்சியும், மீண்டும் வேலை செய்யக் கூடிய உசாரும் வந்து விடுகிறதாம் ! என்னதான் சிறந்த மாத்திரையானாலும் உழைப்புக்குப் பின் போதிய ஓய்வு கொண்டு, இயற்கையான முறையில் உடலைச் சுறுசுறுப்பாக்கிக் கொள்வதுதான் சிறந்த வழி.

■ மாதம் சுமார் ரூபா 500/- சம்பாதிக்கிறவர், அரிசிக் கூப்பன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பலருக்கு இந்த தொகையில் அரைவாசிக்கு மேல் வீட்டு வாடகையாகவும், ஏற்கனவே பட்ட கடன்களுக்கு கழிவு தொகை வட்டிகளாகவும் போய்விடுகிறது ! இந்த 'ஏழை' மனிதர் வருமானவரி கட்டும் பாவத்துக்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார் !



■ மட்டக்களப்பு இராசதுரை 'சொல்லின் செல்வர்' என்ற புகழுக்குரியவர். இவர் சமீபத்தில் பாராளுமன்றத்தில் ஒரு சிறந்த உரை நிகழ்த்தினார். சிங்களமக்களோடு ஒத்து வாழ்வதில் தமிழ்மக்களுக்குள்ள விருப்பத்தையும், அதே சமயம் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளையும் எடுத்துச் சொன்னார், பிரதமரும் இவருடைய உரையை கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார். எறும்புகள் ஊர்ந்து கொண்டே இருக்கவேண்டும்; கல்லுத் தேயாமலா போகப்போகிறது?

■ 'சுந்தரி' என்ற வார சஞ்சிகை தினபதி பத்திரிகைக் குழுவிலிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கிறது. இலங்கையிலிருந்து இப்படி ஒரு சஞ்சிகை வார இதழாக வருவது இதுதான் முதன் முறை என்று சொல்லலாம். ஈழத்துச் சஞ்சிகை உலகில் துணிந்து ஒரு படி ஏறியிருக்கும் 'சுந்தரி'க்கு எனது நல்வாழ்த்துக்கள் ! — வசதி உள்ளவர்கள். இன்னும் சற்று வளமாக நடத்தலாம்,

பசுவின் பால் உடலுக்கு நல்லது. ஆனால் இதனை பச்சையாக அருந்தக் கூடாது. நன்கு காய்ச்சிய பின்பே அருந்த வேண்டும், இல்லாவிடில் நோய்கள் உண்டாகி உடல் நலத்தைக் கெடுத்து விடும். பாலைக் காய்ச்சுவதால் உயிர்ச்சத்துக்கள் அழிந்து விடுவது உண்மைதான். அதற்காக தினமும் இரு வகை பழங்களினை சாப்பிட்டால் நல்லது. எலுமிச்சம் சாறு மிகவும் தரமானதும் உடல் நலத்தை பேணுவதும் ஆகும்.

அரசியல் வாழ்வினிலே ராஜாஜியும், பெரியாரும்சாணக்கிய இரு கிழட்டுப் புலிகள், காலம்போய் வயது கூடிக் கொண்டாலும் அரசியல் ஞானம் இவர்களை விட்ட பாடேயில்லை. ஆனால் இவர்கள் இனிய நண்பர்களும்கூட. சொந்த வாழ்



க்கையில் இருக்கும் இவர்கள் நட்பின் நெருக்கம் அரசியல் உலகிலே கடுகளவும் கிடையவே கிடையாது. எக் காலத்திலும் அரசியல் உலகில் எதிரும் புதிருமாகத்தான் இருவரும் இருந்து வருகின்றனர். இவர்கள் கூறும் கருத்துக்களும் இப்படியே அமைகின்றன.

வெங்காயத்தில் உயிர்ச் சத்து சி, பி, இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து முதலியன நிரம்பவுண்டு. சிறு பூச்சிக்கடி, வண்டு, தேள்கடி முதலியவற்றிற்கும் சிறந்த மருந்து. தலையில் ஏற்படும் ஒரு வகை வழுக்கைக்கு நாள்தோறும் வெங்காயம் தேய்த்து முழுகி வர மயிர் முளைக்குமென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வெங்காயத்தினை உப்புடன் சேர்த்து உண்ண வயிற்று வலி, இரத்தப் பித்த நோய் முதலியன தணியும். வலிப்புக் கொடுக்கும் கட்டிகளையும் பழுக்க வைத்து உடைக்கவல்லது. உணவின் சுவைக்கு மட்டுமல்ல உடலின் நலத்திற்கும் வெங்காயம் முக்கியமான தொன்றாகும்.

திருடர்களுக்கென ஒருவித பெயிண்டை பிரிட்டன் தேசத்தவர் கண்டு பிடித்துள்ளனர். பல நிறங்களில் காணப்படும் இப் பெயிண்ட் வழுக்கும் தன்மையுள்ளது. சுவரிலோ அல்லது மாடி வீடுகளில் உள்ள கம்பங்களிலோ இது பூசப்படுவதால் திருடர்கள் சுலபமாக ஏறி தம் காரியத்தை முடிக்கவே முடியாது. இதனை சாதாரண பெயிண்ட் பூசுவது போலவே பூசலாம். ஆனால் காயாத நிலையில் இது கண்ணுக்குத் தோன்றினாலும் ஒட்டவே மாட்டாது. வழுக்கும் தன்மையான இவ்வகை பெயிண்டை இலங்கை அரசு வரவழைத்தால் இன்றைய நிலையில் மிகவும் பிரயோசனமாக இருக்கும்!

தலைக்கு எண்ணை தேய்க்காது திரிவது தற்போதைய நாகரீகம். பருவ யுவதிகளும். -துடிப்புள்ள காளைகளுமே இம் மோகத்தில் பீடிக்கப்பட்டுள்ளோரில் பெரும்பான்மையோராவர். எண்ணை வைக்காது விட்டால் உடல் நிலை கெடும் மூளை குழம்பிவிடும், தலைபீனிசம் உண்டாகும் என்பதெல்லாம் பயமுறுத்தல் வார்த்தைகளே. தலைக்கு எண்ணை வைக்காதுவிட்டால் எந்த நஷ்டமும் ஏற்படவே மாட்டாது. நாகரீக உலகினர் இது விடயத்தில் பயங்கொள்ளத் தேவையே இல்லை. ஆனால் எதையும் திடீரென மாற்றக்கூடாது. மெல்ல மெல்லப்பழகிக் கொள்ளவேண்டும்.

தமது அமைச்சின் அழைப்புகளையோ அல்லது வேறு ஏதும்செய்திகளையோ தமிழ்பகுதி தமிழ் எம். பிக்களுக்கு தமிழிலேயே தனது தமிழ் கையொப்பத்துடன் அனுப்பத் தொடங்கி இருப்பவர் கௌரவ அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா. அதேபோல தமிழ் பகுதிகளில் தமிழில் பேசி பாராட்டுப் பெற்றும் வருகிறார் அமைச்சர் ரத்னாயகா. இவர்களைப் போல இரு சமூகத்தவர்களும் மொழிகளை தத் தமக்குள் பரிமாறிவந்தால் இனத்துவேஷத்திற்கு இடமே இல்லை என எண்ணவும் தோன்றுகின்றது.

இன்றைய வானொலி தமிழ் சேவையின் ஈழத்துப் பாடல் வரிசையில் முன்னணி வகிக்கும் பாடகி சுஜாதா அத்நாயக ஆவார். சிங்கள சமூகத்தைச் சார்ந்தவர் ஆனாலும் தமிழ் பாடல்கள் பலவற்றை தமிழ் சொற்களின் சுவை குறையாது சிறப்பாக பாடிவருகின்றார். இவரது பாடலைக் கேட்பவர்கள் இவர் சிங்களப் பெண்ணா என அதிசயிக்கிறார்கள்.

'வெயிலினில் அலைந்தால் உடல் கறுக்கும்' -இது நம்மவர்கள் சொல்லிக் கொள்ளும் அன்றாட பேச்சு. ஆனால் மேல்நாட்டவர்கள் சொல்லிக் கொள்வதனை கேட்க எமக்கு வியப்பாகத்தானிருக்கும். காப்பி அதிகமாக அருந்துவதனாலோ அல்லது புகைபிடித்தாலோ அல்லது இனிப்பு பண்டங்களை உண்பதனாலோ உடல் கறுக்குமாம்!

அண்ணல் காந்தியினை அறியாதவர்கள் இல்லை. தன் வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் சத்திய போதனை நடத்தி வெற்றி பெற்ற மகாத்மா அல்லவா! இவர் விரும்பிய ஒரே நூல் 'பகவத்கீதை' ஆகும்.



'பலனை எதிர்பாராதே, கடமையைச் செய்' என்கிற தத்துவத்தினை இந்நூல் உணர்த்துவதாக கூறியிருக்கின்றார். கடமையில் நம்பிக்கை வைக்க இந்நூல் பெரிதும் இவருக்கு உதவியதாம். இவர் விரும்பிப்படித்த ஆங்கில நூல் 'ஜான் ரஸ்கின்' எழுதிய 'கடைசி மட்டும்' ***(Until the last)*** என்பதாகும்.

''திருமலை-சுந்தா''



க. மகாலிங்கம், கொழும்பு-4.

★ காராக்கிருகத்தில் அடைபட்டிருககும் காசி ஆனந்தனை விடுவிக்க, தமிழர் கூட்டணி எடுத்த நடவடிக்கைகள் என்ன? இனி எடுக்கப்போகும் நடவடிக்கைகள் என்ன?

சட்ட நடவடிக்கை பற்றி முயற்சித்தோம். சாத்தியப்படவில்லை. உரிய குழுவிற்கு தம்மை விடுதலை செய்யுமாறு விண்ணப்பிக்கக் கவிஞர் மறுத்துவிட்டார். அவரையும், ஆனந்த விநாயகம், மணியம் முதலிய மற்றையோரையும் விரைவில் விடுதலை செய்யாவிட்டால் அல்லது நீதி மன்றத்தில் வழக்குத் தொடராவிட்டால் மக்கள் கிளர்ச்சியை ஆரம்பிக்க எண்ணுகிறோம்.

கனக-தனன், முள்ளியவளை.

★ தமிழர்கள் தனிநாடு பெற்றால், அதற்கு வேண்டிய பொருளாதார வளம் இல்லை என்கிறார்களே. அவர்களுக்கு உங்கள் பதில் என்ன ?

போதிய வளம் உண்டு நில வளம், கடல்வளம், கைத்தொழில் வளம் மாத்திரமல்ல, கனி வளமும் எண்ணெய் வளமும் கூட உண்டென்று ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் வடபகுதியில் முயற்சி செய்கின்றார்களே!

செ. அருந்ததிதாசன்,
தொண்டைமானாறு.

★ பொதுவாக எந்தக் கட்சிக்கும் அமைப்பு ரீதியிலான பலம் இருக்கவேண்டும். மேல் மட்டத்தில் இருக்கும் சில நிரந்தர தலைவர்கள் மட்டும் கட்சியை நடத்துவது நல்லதாகாது. இலங்கையிலுள்ள மற்றக் கட்சிகளைப் போல உரிமைக்காகப் போராடும் தமிழரசுக் கட்சிக்கும் ஆதரவு இருந்தாலும் கட்சியின் தீர்மானங்கள் சில நிரந்தர தலைவர்களால்தான் தீர்மானிக்கப்படுகின்றன. இந்நிலை நீக்கப்படுமா ?

கட்சியின் கொள்கைகள் அவற்றை அடைய எடுக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் பொறுப்பு எல்லாக் கிளைகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட மாநாட்டினதே, மாநாட்டின் தீர்மானத்தையே பொதுச் சபையும் செயற்குழுவும் நிறைவேற்றும். இந்திய தேசீய காங்கிரஸ் இயங்கிய வழியிலேயே இ. த. அ. கட்சியும் இயங்கி வருகின்றது.

ச. தில்லைநாதன், மருதனுமடம்.

★ இலங்கை புவியியல் அமைப்பின்படி தனிநாடு கோரிக்கை சரிவராது என்று ஒரு சிலர் சொல்லுகிறார்களே ?

சரித்திரம் தெரியாதவர்கள் தான் இப்படிச் சொல்வார்கள். 1618ஆம் ஆண்டில் சங்கிலி மன்னன் போர்த்துக்கீசரால் சிறைப்பிடிக்கப்படும்வரை தமிழர்க்கு இலங்கையில் தனியரசு பல நூற்றாண்டுகளாக நிலவி வந்தது. 1618க்கும் 1972க்கும் இடையில் இலங்கையின் புவியியல் அமைப்பில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா ?

வாசுகி, தெஹிவளை.

★ கூட்டணியில் உள்ளவர்களில் "தனிநாடு" கொள்கையில் உண்மையான பிடிப்புள்ள ஒரே ஒருவரான தாங்கள், ஏன் அக்கொள்கையுடைய தமிழர் சுயாட்சிக் கழகத்தில் சேர்ந்து அந்த இலட்சியத்தையடைய உழைக்க முன்வரக்கூடாது?

அந்த இலட்சியத்தை அடைய இன ஒற்றுமை வேண்டும். அதற்காகவே கூட்டணி அமைத்திருக்கிறோம். உண்மையான இலட்சியப்பற்றிருந்தால் விருதுக்கு வேட்டையாடுவதை விடுத்து சுயாட்சிக்கழகமும் கூட்டணியில் சேர்ந்து கூட்டணியை இந்த இலட்சியப் பாதையில் வேகமாகச் செல்லச் செய்ய வேண்டும்.

க. மகாலிங்கம், கொழும்பு-4

★ அரசியல் நிர்ணய சபையில் சமஷ்டிக்கோரிக்கை காணப்படாததால் தமிழரசுக் கட்சி சமஷ்டிக்கொள்கையை கைவிட்டுவிட்டது எனக் கருதலாமா?

தமிழரசுக்கட்சியின் கொள்கையை மாற்றக் கட்சியின் மாநாட்டுக்கே அதிகாரம் உண்டு. மாநாடு இன்னும் நடைபெறவில்லை, கொள்கைமாற்றப்படவில்லை. ஆயினும் தந்தை செல்வாவினதும் எம் எல்லோரதும் சிந்தனை உறவோடு உரிமையை வழங்கச் சிங்கள மக்கள் ஆயத்தமில்லாவிட்டால் எம் உரிமையை நாமே நிலைநாட்டிக்கொள்ளும் திசையில்தான் சென்றுகொண்டிருக்கிறது.

எம். எஸ். சிவா,
தெல்தோட்டை:

★ இலங்கை தமிழ்த்திரைப் பட வளர்ச்சியைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

முப்பது இலட்சம் மக்கள் மாத்திரம் ஆதரிக்கும் படங்கள் வெற்றியடைவது கடினம். உலகத்தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும் தரத்துக்கு வளர்க்க வேண்டும். நம் கலைஞர்களையும் தமிழ் நாட்டுக்கலைஞர்களையும் சேர்த்து ஆரம்பத்தில் படம் எடுப்பது இத்துறையில் எம்மை வளர்க்க உதவும்.




அறிவுக் கட்டுரை

# வாழ்வில் முன்னேற....

மக்கள் அனைவரும் இயல்பாகவே வாழ்வில் முன்னேற வேண்டும், பெயரும் புகழும் எய்தல் வேண்டும் என்ற அவாவுடையவர்களாக விளங்குகின்றார்கள். இது மனித இயல்பு. இவ் எண்ணங்கள் – ஆசைகள் இல்லாதவன் மானிடனாக இருக்கமுடியாது என்பது மனோதத்துவ நிபுணர்களின் முடிபு. வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவும் ஏணிகள்: துணிவுத்தன்மை, புத்திசாலித்தனம், இடையறா உழைப்பு, உள்ளக் கிளர்ச்சி ஆர்வம், விடாமுயற்சி ஆகியவைகளே.

## ஆர்வம் உண்டேல் முன்னேற்றம் உண்டு.

உள்ளத்திலிருந்து பொங்கிப் பெருகும் உற்சாகமும் அவாவுமே ஆர்வமாகப் பரிணமிக்கின்றது. இவ் ஆர்வம் எல்லோரிடத்திலும் இருத்தல் அவசியமாகும். சிலருடைய வாழ்வில் இவ் ஆர்வமும், இவ் ஆர்வத்தைத் தூண்டிவிடும் சக்திகளும் இயற்கையாக அமைவதினால் வாழ்க்கை அடித்தளத்திலிருந்து நுனித்தளத்திற்கு ஏற்றப்படுகின்றார்கள். சிலருடைய வாழ்வில் இவ் ஆர்வமும் ஆர்வத்தைத் தூண்டிவிடும் சக்திகளும் இயற்கையாக அமைவதில்லை. ஆனால் இப்படிப்பட்டோர் இவ் ஆர்வத்தினை மனோதத்துவப்பயிற்சி மூலம் பெற்றுக்கொள்ளலாம். மனோதத்துவப் பயிற்சி மூலம் வாழ்க்கையைச் சீர்படுத்துபவர்கள் நாளடைவில், இயற்கையாகவே இவ் இயல்புகளைப் பெற்றோரைக்காட்டிலும் வளமாக வாழலாம்.

## குறிக்கோள் உடையவனே வாழ்வில் துரித முன்னேற்றம் அடைகின்றான்.


குறிக்கோள் அற்ற வாழ்க்கை, எவ்விடம் சேரவேண்டும் எனக் குறிக்கோள் அற்று நடுக்கடலில் புயலுக்கும் அலைக்கும் சிக்குண்டு தத்தளிக்கும் கப்பலுக்குச் சமமாகும். நீங்கள் ஓர் குறிக்கோளை அடைவதற்காக உறுதியுடனும் உற்சாகத்துடனும் ஈடுபட்டு அவ் இலக்கினை அடைந்ததும், உடனடியாக வேறோர் குறிக்கோளை மேற்கொண்டு, அதற்காக மேன்மேலும் மனக்கிளர்ச்சியுடன் ஈடுபடல் வேண்டும். ஆனால் ஒரே சமயத்தில் பல குறிக்கோள்களை நீங்கள் எண்ணல் ஆகாது. அப்படியாயின் அது குறிக்கோளாக இருக்கமுடியாது. ஒரு சமயத்தில் பல குறிக்கோள்களைப் பூணுதல், ஒரு வண்டியில், அதன் நான்கு பக்கங்களிலும் நுகம் பூட்டி, மாட்டைக்கட்டிச் சவாரி செய்ய முயல்வதற்குச் சமமாகும். குறிக்கோளற்ற வாழ்க்கை அதிட்ட வாழ்க்கை ஆகமுடியாது. குறிக்கோள். உடையவனையே அதிட்டதேவதை நாடிச் செல்வாள்! எம்முடைய குறிக்கோள் எவ்வளவு உயர்வாக இருக்கின்றதோ, அவ்வளவு உயர்வாகஎமதுஅதிட்டமும்அமையும்!

✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ க. குகதாசன்

## தோல்வியை நினைத்து அஞ்சுவது பேதமை.

குறிக்கோள் ஒன்றினை அடைவதற்குப் பாடுபடுகையில் இடுக்கண்ணும் தடைகளும் மாறிமாறி வரும். இத்தடைகளை எதிர்த்து நின்று செயலை முழுமையாக நிறைவேற்றுவதற்குரிய மன உறுதிவேண்டும். உள்ளக் கிளர்ச்சியும், உயர்ந்த முயற்சியும் எவ்வளவுதான் ஒருவனிடம் இருப்பினும், இறுதிவரை மனஉறுதி இல்லாமற் போனால் செயலை முழுமையாக நிறைவேற்றிப் பயன் காண முடியாது. ஆகவே நீங்கள் உங்களது குறிக்கோளை அடைய எத்தனிக்கும்போது, ஏற்படும் தடைகள் யாவும் ''எனது வெற்றிப்பாதையிலுள்ள படிக்கற்களே இவை'' என எண்ணி வீறு நடைபோடுதல் வேண்டும். தோல்வியைக் கண்டு மனம் தளரலாகாது. தோல்விகளை எண்ணி எண்ணி அஞ்சினால் மேன்மேலும் தோல்விகள் பல ஏற்படும்.

தோமஸ் அல்வா எடிசன் மின் விளக்கைக் கண்டு பிடிப்பதற்காக முயற்சி செய்துகொண்டிருந்தார். அவர் ஆயிரம் தடவையாகவும் அம் முயற்சியில் தோல்வி கண்டபோது ''மின் விளக்கொன்றினை எப்படிச் செய்யக்கூடாது என்று ஆயிரம் வழிகள் எனக்குத் தெரியும். இவ் வழிகளைத் தவிர்த்து வேறு வழிகளில் முயற்சி செய்வேன். ஈற்றில் நான் வெற்றி பெறுவேன்'' என்று கூறினாராம். ஆயிரம் தடவையும் முயற்சிசெய்து கைகூடாதது, அவரது ஆயிரத்திப் பத்தாவது முயற்சியில் கைகூடியது. அவரின் ஊக்கமும் ஆக்கமும் குன்றியிருந்தால் எமக்கு மின் விளக்குக் கிடைக்காமல்



ஈழத்து நடிகர் ஸ்ரீசங்கருக்கு சிவாஜி கணேசனின் தயவு கிடைத்தது. 'ராஜராஜசோழ'னில் ஈழத்துப்புலவராக நடிக்கும் வாய்ப்பைப் பெற்றார் அவர். இதற்கு முன்பும் ஈழத்து நடிகர்கள் சிலர் தமிழகத்துச் சினிமாப் படங்களில் சிறு சிறு பாகங்களை ஏற்று நடித்திருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீசங்கர் இந்தச் சிறு வாய்ப்பைப் பயன் படுத்தி தமிழ்ச் சினிமா உலகில் மேலும் மேலும் பிரகாசிக்கக் கூடிய வாய்ப்புகளைப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. ராஜராஜ சோழனில் நடித்துவிட்டு ஈழம் திரும்பிய ஸ்ரீசங்கருக்கு பருத்தித்துறை பிறேமா இண்டஸ்றிஸ் சார்பாக அதிபர் கே, எஸ். வேல்முருகு, கடந்த வாரம் ஒரு பாராட்டு விழா நடத்தியிருக்கிறார். அந்த விழாவில் 'கலைவேந்தன்' என்ற பட்டத்தை ஸ்ரீசங்கருக்குச் சூட்டியிருக்கிறார் கலையரசு சொர்ணலிங்கம்.

பேர்யிருக்கலாம்! ஆகையினுல், எதிர்ப்படும் தடைகளை, எண்ணி எண்ணி ஏங்காமல், 'என்னுல் முடியும்' என்று எண்ணிச் செயற்படுபவனே ஈற்றில் வெற்றி வீரனுக வாழ்கின்ருன்.

## நம்பிக்கை.

எக்காரியத்திலும் நாம் ஈடுபடும்போது, நம்பிக்கையுடன் ஈடுபடுதல் வேண்டும். நெப்போலியன் கில் என்ற மனேதத்துவ நிபுணர் "நம்பிக்கையே எவ்விடயத்திலும், எத்தருணத்திலும் துணையாகவிருக்கும் ஓர் அருமந்திரம்" என்று கூறியுள்ளார். பெரிய செயல்களைச் செய்து புகழ்பெற்று விளங்குகின்றவர்களின் வாழ்க்கையை நன்கு ஆராய்ந்தால் ஓர் உண்மை நன்கு புலப்படும். அதாவது, அவர்கள் தமது வாழ்நாளை, வீண்நாளாகக் கழியாது, அல்லும் பகலும் இடையீடின்றித் தாம் மேற்கொண்ட செயல்களைத் துணிவுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொண்டதனுலேயே அவர்களால் அரும் பெரும் செயல்களை ஆற்ற முடிந்தது என்பதாகும்.

## ஆர்வம் : ஊக்கம்

ஒரு செயலை ஒருவன் மேற்கொள்ளும்போது, அச் செயலைச் செய்வதற்கு அவன் உள்ளத்தில் உண்மையான ஆர்வம் எழுதல் வேண்டும். இதையே வள்ளுவப் பெருமானும் "ஊக்கமுடையவன் ஒருவன்தான் சிறப்பாக் ஒன்றை உடையவன் என்று மதிக்கப்படுவான். ஊக்கமற்றவர்கள் வேறு பலவற்றை எத்துணையளவு பெற்றிருப்பினும் உண்மையில் அவற்றை உடையவராக மாட்டார்" என்று கூறுகின்ருர்.

"உடையார் எனப்படுவது
ஊக்கம் அஃதிலார்
உடையது உடையரோ மற்று"

ஊக்கம் நிறைந்தவனை நோக்கி ஆக்கம் எனப்படுகின்ற திருமகள் தானுகவே தேடிவருவாள் என்றும் வேருேரிடத்தில் வள்ளுவப் பெருமான் கூறுகின்ருர்.

## நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்.

இன்றிலிருந்து நீங்கள் ஓர் புதிய மனிதன் என எண்ணிக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து வாழ்க்கையின் மேம்பாட்டிற்கான புதிய கண்டுபிடிப்பைக் கண்டுகொண்டீர்கள் என்று ஆனந்தம் கொண்டு புதிய வாழ்வொன்றை அமைத்துக் கொள்ளுங்கள். தோல்விகளை எண்ணி ஏங்கிய நாட்கள் நடந்தவைகளாகவே இருக்கட்டுக்கும்: இனி நடப்பவை நல்லவைகளாகவே இருக்கட்டும். புத்தெழுச்சியும், புதிய எண்ணங்களும் உங்கள் வாழ்வைப் பிரகாசம் செய்திடும்!


அருந்தி மகிழுங்கள்!


**சீதா ஸ்பெஷல் குளிர்பானங்கள்**

✱ ஒறேஞ் பார்லி ✱ ஐஸ்கிறீம் ✱ கொக்கோகோலா
✱ விமேஐ ✱ பைனப்பிள்

**கொண்டாட்டங்களுக்கு குதூகலம் தரும் பானங்கள்!**

**சீதா குளிர்பானத் தொழிற்சாலை**

321, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.



காமராஜர் தமிழ் நாட்டின் பிரதமராக இருந்தபோது அவரை 'பச்சைத்தமிழன்' என்று சொல்லி ஆதரித்தார் ஈ. வே. ரா. தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் தமிழர்களின் ஆட்சி' என்று தி. மு. க வுக்கு ஆதரவு கொடுத்தார். எம். ஜி. ஆர். பிரிந்து போய் விட்டபோதும், பெரியாரின் ஆதரவு கருணாநிதிக்குத்தான் இருக்கிறது. கருணாநிதியின் ஆட்சிதான் நிலைக்கும் என்று பெரியார் நினைப்பதுதான் காரணம்!

'பிளமிஸ்கோ' என்ற கொக்கு இனத்தைச்சேர்ந்த பறவைகள் பெருங் கூட்டங்களாகவே வசிக்கும். இவற்றில் ஒரு ஆணையும் பெண்ணையும் பிரித்தெடுத்துக்கொண்டு வந்து சோடியாக வளர்த்த போதிலும் இது முட்டை போடாது. கூட்டமாக இருக்கும் போதுதான் இன விருத்தி செய்கின்றன. இங்கிலாந்திலுள்ள ஒரு பறவை வளர்ப்புப்பூங்காவில் இந்தப் பறவை இனத்தை விருத்தி செய்வதற்காக, மேலும் 100 பறவைகளை ஆபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்போகிறார்கள். ஆபிரிக்காவிலுள்ள ஒரு ஏரிக் கரையில் மட்டும் சுமார் ஐந்து லட்சம் 'பிளமிஸ்கோ' பறவைகள் வசிக்கின்றன !

மு. க. முத்து ஒரு அதிர்ஷ்டக்கார இளைஞர் என்றே எல்லோரும் முதலில் நம்பினார்கள். எடுத்த எடுப்பிலேயே அவர் பெரிய ஸ்டாராக வந்தார். எம். ஜி. ஆர்., சிவாஜியோடு போட்டிக்கு நிற்கிற அளவுக்கு தலையைத் தூக்கினார்: ஆனால் 'கண்'பட்டுவிட்டதென்று சொல்வார்களே, அந்த மாதிரி ஆகிவிட்டது ! மளமளவென்று பல ஊர்களிலும் தோன்றிய மு. க. முத்து மன்றங்களைக் கலைத்து விடும்படி அவருடைய தந்தையே உத்தரவிட்டார். தொடர்ந்து வந்த எம். ஜி. ஆர் குழப்பங்களினால் முத்துவின் விலாசமே அடங்கிக் கிடக்கிறது. 'பிள்ளையோ பிள்ளை' படமும் பெரிய வெற்றிப்படமாக அமையவில்லை, இப்போதைய சூறாவழி அடங்கிய பிறகுதான் முத்துவின் தலைவிதி தெளிவாகும் !

கோழிவளர்ப்பு முன்பெல்லாம் வீட்டுக்கு வீடு சாதாரண முறையில் நடைபெற்று வந்தது. ஆனால் இப்போது விஞ்ஞான முறையில் கோழிப்பண்ணைகளை பலர் நடத்துகிறார்கள். கோழி வளர்ப்பைச் சரியான முறையில் கற்று, இரண்டாயிரம் ரூபாவரையில் மூலதனமிட்டு நடத்தினால், ஒரு பட்டதாரி உத்தியோகத்தர் வாங்கும் சம்பளத்திலும் பார்க்க கூடுதலான வருவாயைப் பெற முடியும். ஆனால், 'கோழி மேய்த்தாலும் கோறணமேந்தில் (கவர்ண்மெண்டில்)மேய்க்கவேண்டும்' என்ற புத்தி நமது இளைஞர்களிடமிருந்து எப்போது நீங்கப்போகிறதோ!

ஆண்டுதோறும் உங்கள் அபிமானத்துக்குரிய




# ஆனந்தா திருக்குறட் கலண்டர்

## இப்பொழுது எங்கும் கிடைக்கும்.



அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: திரு. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.